[1972 ஏப்ரல் 3

கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள தரிசு நிலங்கள்

*855 வினா—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில், பல ஆண்டுகளாக ஏல தரிசாக உள்ள நிலங்களை உடனடியாகத் தரிசாக மாற்றி அனுபோகதாரர்களுக்கு அடைமானம் செய்துவைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. ந. நாச்சியப்பன்: பேரவைத் தலைவரவர்களே, 12 ஆண்டுகளாகத் தீர்வை செலுத்தி, சலான் கட்டி 1958-ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலும் அந்த விவசாயிகளுக்கு நிலம் அடைமானம் செய்யவில்லை. பல தடவைகள் அந்த விவசாயிகள் கோட்டாட்சித் தலைவரிடத்திலே சென்றும் கட்டுக்கோப்புகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. இவைகளைப் போக்க ஒரு தீர்வை செலுத்தியவர்களுக்குக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் அடைமானம் செய்ய முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கள்ளக் குறிச்சி வட்டத்தில் 1.767 எக்கர் 46 சென்ட் நிலம் ஏலத்தரிசாக இருக்கிறது. 87 ஏக்கர் 39 சென்ட் சம்பந்தப்பட்ட வாரிசு தாரர்களுக்கு அடைமானம் செய்யப்பட்டது. மீதம் நிலத்தை ஏலம் விட்டு காயம் செய்திருக்கிறார்கள், அல்லது வேறு யாராவது ஆக்கிரமிப்புச் செய்து அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் 12 ஆண்டுகள் தீர்வைகட்டி வைத்திருந் தால் அவைகளைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிக்கிறேன்.

அசோக் நகரிலிருந்து இணைப்புச்சாலை.

*856. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972 ஏப்ரல் 3]

சென்னை அசோக் நகருக்கும், பூவிருந்தவல்லிச் சாலைக்கும் இடையே இணைப்புச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

சுகநதியின் குறுக்கே சிறு அணை.

* 857 **வினு—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காட்டில் உள்ள வந்தவாசி நகருக்கு அருகில் ஓடும் சுகநதியின் குறுக்கே ஒரு சிறு அணைகட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உல்லாசப் பயணிகள் தங்குமிடங்கள்.

* 858 வினு—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில், " உலக்கை அருவி " " திற்பரப்பு அருவி " " முத்துக்குழி வயல் " போன்ற வனப் பிரதேசங்களையும், கன்னியாகுமரி நகர் போன்ற இடங்களையும் உல்லாசப் பிரயாணிகள் தங்குமிடமாக்குவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்புள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கன்னியாகுமரி நகர் ஏற்கனவே உல்லாசப் பயணிகள் தங்குமிடமாக இருந்து வருகிறது. ஆனல் குமரி மாவட்டத்திலுள்ள " உலக்கை அருவி " " திற்பரப்பு அருவி " " முத்துக்குழி வயல் " போன்ற வனப் பிரதேசங்களை உல்லாசப் பயணிகள் தங்குமிடமாவதற்குரிய செயற் குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.